**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2021 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை
**ஐ.ஏ.எண்.2/2021 இன் அ.வ.எண்.323/2018**

1) கோயமுத்தூர், குறிஞ்சி, ஹவுஸிங் யூனிட், பேஸ்-1, க.எண்.A-10 என்ற விலாசத்தில் வசிக்கும் இந்து N.அய்யாசாமி மகன் A.கனகராஜ்.

2) கோயமுத்தூர், குறிஞ்சி, ஹவுஸிங் யூனிட், பேஸ்-1, க.எண்.A-10 என்ற விலாசத்தில் வசிக்கும் இந்து A.கனகராஜ் மனைவி M.பத்மாவதி.

... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

1) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, சொக்கனூர், சத்தக்கல்புதூர் க.எண்.11/29 என்ற விலாசத்தில் வசிக்கும் இந்து லேட்.தேவராஜ் மனைவி சுப்புலட்சுமி.

2) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, சொக்கனூர், சத்தக்கல்புதூர் க.எண்.11/29 என்ற விலாசத்தில் வசிக்கும் இந்து லேட்.தேவராஜ் மகள் சங்கீதபிரியா.

3) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, சொக்கனூர், சத்தக்கல்புதூர் க.எண்.11/29 என்ற விலாசத்தில் வசிக்கும் இந்து லேட்.தேவராஜ் மகன் பிரதீப்குமார்.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 16.11.2021 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பிரசாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செங்குட்டுவன் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும்,

ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

மனு தாக்கல் நாள் : 23.09.2021

இம்மனுவானது, தாவா சொத்தினை தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து சரியான விஸ்தீரணத்தையும், பௌதீக தன்மையையும் கண்டறிந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151-ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இறுதி உத்தரவு</u>**

1. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது.
2. செலவுத் தொகை இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

**<u>அயிட்டம் - 1</u>**

திருப்பூர் ரிடிடு கிணத்துக்கடவு சப்டி பொள்ளாச்சி வட்டம், சொக்கனூர் கிராமம் புலத்தில் பட்டா எண்.457-ல் க.ச.288/2 நெ.காலை பு.ஹெக்டேர் 6.37.5க்குச் சரியான பு.ஏ.15.78 இதில் கிழபுறம் தென்வடலாக பு.ஹெக்டேர் 1.70.0க்குச் சரியான பு.ஏ.4.20 விஸ்தீரணமுள்ள பூமிக்கு எல்லை:-

| | | |
|---|---|---|
| க.ச.288/2 நெ.காலையில் நாங்கள் நிறுத்திக் கொண்ட பூமிக்கும், மேற்படி காலையில் நாளது தேதியில் எங்களிடம் கிரையம் பெறும் பத்மாவதி பூமி பு.ஏ.3.40க்கும் | ... | கிழக்கு, |
| க.ச.288/3 நெ.காலைக்கும் | ... | மேற்கு, |
| கிழமேல் ரோட்டுக்கும் | ... | தெற்கு, |
| க.ச.291 நெ.காலைக்கும் | ... | வடக்கு. |

இதன் மத்தியில் மேற்படி பு.ஹெக்டேர் 1.70.0 க்குச் சரியான பு.ஏ.4.20 விஸ்தீரணமுள்ள பூமியும் மேற்படி பூமிக்குண்டான மாமூல் வழி நடை தட பாத்தியங்களும் ஆகிய இந்த சொத்துக்கள் சகிதம்.

<u>அயிட்டம்-2</u>

திருப்பூர் ரிடிடு கிணத்துக்கடவு சப்டி பொள்ளாச்சி வட்டம், சொக்கனூர் கிராமம் புலத்தில் பட்டா எண்.457-ல் க.ச.288/2 நெ.காலை பு.ஹெக்டேர் 6.37.5 க்குச் சரியான பு.ஏ.15.78 இதில் தென்மேற்கு மூலையில் பு.ஹெக்டேர் 1.37.5 க்குச் சரியான பு.ஏ.3.40 விஸ்தீரணமுள்ள பூமிக்கு எல்லை:-

மேற்படி, க.ச.288/2 நெ.காலையில் நாங்கள்
நிறுத்திக் கொண்ட பூமிக்கும், ... தெற்கு,
மேற்படி, க.ச.288/2 நெ, நாளது
தேதியில் எங்களிடம் கிரையம் பெறும்
டாக்டர் A.கனகராஜ் பூமி பு.ஏ.4.20 க்கும் ... மேற்கு,
ரங்கேகவுண்டர், ரங்கம்மாள் ஆகியோர் பூமிக்கும் ... வடக்கு,
கீழே கண்ட க.ச.289/2 நெ.காலை பு.ஏ.1.53
விஸ்தீரணமுள்ள பூமிக்கும், க.ச.289/1,
288/1 நெ, காலை பூமிகளுக்கும் ... கிழக்கு.

இதன் மத்தியில் மேற்படி பு.ஹெக்டேர் 1,37.5 க்குச் சரியான பு.ஏ.3.40 விஸ்தீரணமுள்ள பூமியும் மேற்படி பூமியில் உள்ள துரஸ்து கிணர் ஒன்றின் முழு பாத்தியமும்

க.ச.289/2 நெ.காலை பு.ஹெக்டேர் 0.62.0 க்குச் சரியான பு.ஏ.1.53 விஸ்தீரணமுள்ள பூமி பூராவும் இதன் எல்லை:-

ரங்கேகவுண்டர் ஆகியோர் பூமிக்கும் ... வடக்கு,
கீழே கண்ட க.ச.504/2/1 நெ.காலைக்கும் ... கிழக்கு,
கீழே கண்ட க.ச.289/1 நெ.காலைக்கும் மேலே கண்ட

க.ச.288/2 நெ.காலை பு.ஏ.3.40 க்கும் ... தெற்கு,

மேலேகண்டுள்ள க.ச.288/2 நெ.காலை பு.ஏ.3.40 க்கும் ... மேற்கு

இதன் மத்தியில் மேற்படி பு.ஹெக்டேர் 0.62.0 க்குச் சரியான பு.ஏ.1.53 விஸ்தீரணமுள்ள பூமியும்

பின்னும் பட்டா எண்.479-ல் க.ச.504/2 நெ.காலை பு.ஹெக்டேர் 0.03.0 க்குச் சரியான பு.ஏ.0.08 இதன் எல்லை:-

க.ச.289/1, 2 நெ.காலைகளுக்கும் ... மேற்கு,

வாரி புறம்போக்கு இட்டேரிக்கும்,

டாக்டர்.A.கனகராஜ் பூமி பு.ஏ.4.20 க்கும் ... கிழக்கு,தெற்கு

ரங்கேகவுண்டர் பூமிக்கும் ... வடக்கு,

இதன் மத்தியில் மேற்படி பு.ஹெக்டேர் 0.30.0 க்குச் சரியான பு.ஏ.0.08 விஸ்தீரணமுள்ள பூமியும் இதில் பிரிவினையில்லாமல் பொதுவில் சரியாதி. பு.ஹெக்டேர் 0.015 க்குச் சரியான பு.ஏ.0.04 விஸ்தீரணமுள்ள பூமியும் மேற்படி பூமியில் உள்ள துரஸ்து கிணர் ஒன்றில் பொதுவில் சரிபாதி பாத்தியமும் மேற்படி கிணற்றில் வைக்கப்பட்டுள்ள 5 எச்.பி. இ.எம்.பி. செட் ஒன்றின் முழு பாத்தியமும் மேற்படி கிணற்றில் வைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.63-ன் முழு பாத்தியமும் (அதன் காப்புத் தொகை உட்பட)

ஆக காலைகள் மூன்றுக்கும் ஒட்டு பு.ஹெக்டேர் 2.01.0 க்கச் சரியான பு.ஏ.4.97 விஸ்தீரணமுள்ள பூமிகளும் மேற்படி பூமிகளுக்கு உண்டான மாமூல் வழி நடை தட பாத்தியங்களும் ஆகிய இந்த சொத்துக்கள் சகிதம்.

இவ்வுத்தரவு 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- P. சுபாஷினி**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.